வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

தேதி: 10.10.2025 நேரம்: மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், பிரதமரின் தன - தான்ய யோஜனா திட்டத்தையும், பயறு வகைகளுக்கான சுயசார்பு இயக்கத்தையும் தொடக்கி வைக்கிறார்.

ஒவ்வொரு மனிதனின் நல வாழ்விலும், மனநலனுக்கு அடிப்படை பங்கு இருப்பதாக, உலக மனநல தினச் செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவில் டிஜிட்டல்மயப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுக் கழகத்தில் இருந்து ஓய்வு பெற்ற, பல்நோக்கு ஒருங்கிணைப்பாளர்களுக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று பணிக் கொடை வழங்கினார்.

--------------------------

*மோடி பயறு வகை 1 (3)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், பிரதமரின் தன - தான்ய யோஜனா திட்டத்தையும், பயறு வகைகளுக்கான சுயசார்பு

இயக்கத்தையும் தொடக்கி வைக்கிறார். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*மோடி பயறு வகை 2 (18)*

(வாய்ஸ்)

பிரதமரின் தன-தான்ய யோஜனா திட்டத்தின் கீழ், வேளாண் உற்பத்தித் திறனில் பின் தங்கி உள்ள பல்வேறு மாவட்டங்களில், வேளாண் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை கணிசமாக உயர்த்த முக்கியத்துவம் அளிக்கப்படும். இதன் ஒருபகுதியாக, ஒவ்வொரு பண்ணையிலும் பாசன வசதிகளை மேம்படுத்தவும், பல்வகை பயிர் சாகுபடியை ஊக்குவிக்கவும், வேளாண் கடன், மற்றும் கிடங்கு வசதிகளை வலுப்படுத்தவும், நடவடிக்கை எடுக்கப்படும் என, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயறு வகைகளுக்கான சுயசார்பு இயக்கத்தின் கீழ், துவரை, உளுந்து உள்ளிட்ட முக்கிய பயறுகளின் உற்பத்தியை பெருக்க, முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. பதிவு பெற்ற விவசாயிகளின் பயறு உற்பத்தி முழுவதும், குறைந்தபட்ச ஆதரவு விலையில், மத்திய ஏஜென்சிகளால் கொள்முதல் செய்யப்படும் என்றும், இதனால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பது உறுதியாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாட்டின் பயறு சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், பயறு உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட

உள்ளதால், வரவிருக்கும் ஆண்டுகளில், இந்தியாவின் உணவுப் பாதுகாப்பும் வலுப்பெறும் என்றும் வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

*மோடி பயறு வகை 3 (8)*

நாளைய நிகழ்ச்சியின் போது, வேளாண் துறையில் சிறப்பாக செயல்பட்ட விவசாயிகள், உழவர்-உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், மற்றும், புதுமைப் படைப்பாளர்களுக்கு விருதுகளையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்க இருக்கிறார். வேளாண் உள்கட்டமைப்பு நிதி, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், மற்றும், உணவு பதனீட்டுத் துறை தொடர்பான, ஆயிரத்து நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொடக்கி வைப்பார், அல்லது, அடிக்கல் நாட்டுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*மோடி-மனநலம்* (12)

ஒவ்வொரு மனிதனின் ஒட்டுமொத்த நல வாழ்விலும், மனநலனுக்கு அடிப்படை பங்கு இருப்பதை வலியுறுத்தும் தருணமே, உலக மனநல தினம் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று உலக மனநல தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மற்றவர்களை புரிந்து கொண்டு பரிவு காட்ட வேண்டியதன் அவசியத்தையும் இந்நாள் வலியுறுத்துவதாக கூறியுள்ளார். மனநலப் பிரச்சனைகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி, அவர்களும் மகிழ்ச்சியாக வாழப் பாடுபடும் மனநலத் துறையினர்

அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் கூறியுள்ளார். மனநலம் பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள், இயல்பாகவே மேற்கொள்ளப் படும் வகையிலான சூழல் ஒன்றை உருவாக்க, அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

-------------------------

*நிதி ஆயோக்* (13)

வரி விதிப்பு தொடர்பான பல்வேறு குற்றங்களை, குற்றப் பட்டியலில் இருந்து நீக்கி, நம்பிக்கை அடிப்படையில் ஆளுகை வழங்கும் வகையிலான இந்தியாவின் வரி சீர்திருத்தங்கள் என்பது குறித்து, நிதி ஆயோக் தயாரித்துள்ள வரிக் கொள்கை ஆவணத்தை, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு. பிவீஆர் சுப்ரமணியம், புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். வருமான வரி விதிமுறை மீறல்களில், சிவில் தீர்வு இல்லாத நிலையில் மட்டுமே, வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்பது உட்பட, அதிகாரிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் இந்த ஆவணத்தில் இடம்பெற்றுள்ளன. வரிவிதிப்பு, மற்றும், வரிவசூல் நடைமுறைகளை, வரி செலுத்துவோருக்கு உகந்ததாக மாற்றி, வரி இணக்கச் சூழலை மேம்படுத்துவதன் மூலம், இந்தியாவின் வரிக் கட்டமைப்பை உலகத் தரத்திற்கு உயர்த்துவதே இதன் நோக்கம் என்று, திரு. சுப்ரமணியம் கூறினார்.

-------------------------

ஆயுஷ் (11)

இளங்கலை ஆயுர்வேத மாணவர்களிடையே, ஆராய்ச்சி உணர்வை ஊக்குவிக்கும் வகையிலான, 4ஆம் கட்ட SPARK மாணவர் உதவித் திட்டத்தை மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆயர்வேத கல்லூரிகளில், இளங்கலை பயிலும் மருத்துவ, மற்றும் அறுவை சிகிச்சை மாணவர்கள் 300 பேருக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். இதற்கான பதிவு வசதிகள், வரும் 15ஆம் தேதி முதல், நவம்பர் 15ஆம் தேதி வரை, திறந்து இருக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. SPARK திட்டத்தின் கீழ் இதுவரை, நாடு முழுவதும், 289 ஆயுர்வேத கல்லூரிகளைச் சேர்ந்த 591 மாணவர்கள் பயன்பெற்றுள்ளதாகவும் ஆயுஷ் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

------------------------

*பரஸ்பர நிதி* (7)

பரஸ்பர நிதித் திட்டங்களில், SIP முறையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் அளவு, கடந்த செப்டம்பர் மாதத்தில், 29 ஆயிரத்து 361 கோடி ரூபாயாக, முன் எப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது. இது அதற்கு முந்தைய மாதத்தை விட, சுமார் 4 சதவிகிதம் அதிகம் என, இந்திய பரஸ்பர நிதிகளின் சங்கம் தெரிவித்துள்ளது. அனைத்து பரஸ்பர நிதி நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் நிகர சொத்துக்களின் மதிப்பும், 75.61 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

-------------------------

*டிஜிட்டல்* (13)

இந்தியாவில் டிஜிட்டல்மயப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். நல்லாட்சியும்-ஆவணப் பதிவும் என்ற தலைப்பில், தேசிய ஆவணக் காப்பகம் சார்பில் புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கண்காட்சி ஒன்றை தொடக்கி வைத்து பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். இந்தியாவில் புரட்சிகரமாக மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் ஆகியோரின் தொலை நோக்குப் பார்வைகளையும், பங்களிப்புகளையும் வெளிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள், கண்காட்சியில் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் கூறினார். வரலாற்றுப் பதிவுகள், மற்றும், நிர்வாக ஆவணங்களை பேணிப் பாதுகாப்பதில், தேசிய ஆவணக் காப்பகம் ஆற்றி வரும் முக்கிய பங்களிப்பை அவர் பாராட்டினார்.

-------------------------

*ஜிஎஸ்டி- எம்பி* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிடிஸ்டி

சீர்திருத்தங்களால் மத்தியபிரதேசத்தில் பொருளாதாரம் எப்படி எல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி-எம்பி 2 (19)

(வாய்ஸ்)

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மத்திய பிரதேசத்தில், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், தொழிலாளர்கள், மற்றும், சிறு வர்த்தகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. உப்பு வகை நொறுக்குத் தீனிகள் மீதான ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், இந்தூர் பகுதியில், சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்களுடன் செயல்படும் புகழ்பெற்ற ஸ்னேக்ஸ் உற்பத்தி நிறுவனங்கள் ஊக்கம் பெற்றுள்ளன. ட்ராக்டர்கள், பம்புகள், மற்றும் இதர வேளாண் உபகரணங்கள்,5 சதவிகித ஜிஎஸ்டி அடுக்கில் கொண்டு வரப் பட்டுள்ளதால், இத்தகைய பொருட்களின் விலையும் 7 முதல், 13 சதவிகிதம் வரை குறைந்து, சிறு-குறு விவசாயிகளும், நவீன வேளாண் கருவிகளுக்கு மாற வழி ஏற்பட்டுள்ளது. பாரம்பரிய கைவினைப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், மத்திய பிரதேசத்தின் புகழ்பெற்ற கோண்டு ஓவியங்கள்,சுடுமண் சிற்பங்கள், அரக்கு பொம்மைகள், மற்றும், பிரம்பு கலைப் பொருட்களின் விலை குறைந்து, உள்நாட்டு அளவிலும், வெளிநாட்டு சந்தையிலும், இத்தகைய பொருட்களுக்கு வாய்ப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. சத்னா, கட்னி, ரேவா உள்ளிட்ட பகுதிகளில் அதிகமாக உள்ள சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்கள், சிமெண்ட்

மீதான வரிக் குறைப்பினால் பெருமளவில் பயன்பெற உள்ளன. 50 கிலோ சிமெண்ட் மூட்டை மீது, 20 முதல், 30 ரூபாய் வரை விலை குறைவதால்,

*ஜிஎஸ்டி-எம்பி 3 (10)*

வீட்டு வசதி, மற்றும் உள்கட்டமைப்புத் துறையும், கட்டுமானப் பணிகள் ஊக்கம் பெறுகின்றன. காலணிகள், மற்றும், இதர தோல் பொருட்கள் மீதான வரியும் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், இத்தகைய பொருட்களின் விலை, சுமார் 11 சதவிகிதம் வரை குறைந்துள்ளது. இதனால், குவாலியர் உள்ளிட்ட பகுதிகளில் செயல்படும் சிறு-குறு தோல் பொருள் உற்பத்தியாளர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். மொத்தத்தில், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மத்திய பிரதேசத்தில், கிராமங்கள், நகரங்கள் உள்ளிட்ட எல்லா பகுதிகளிலும், பண்டிகை காலத்திற்கு அப்பாலும், தொழில்-வர்த்தக செயல்பாடுகள் அதிகரித்து, பொருளாதாரம் வலுப்பெறும் என்பதில் ஐயமில்லை.

--------------------------

*புதுச்சேரி பணிக் கொடை (9)*

புதுச்சேரி அரசின் மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுக் கழகத்தில், பணிபுரிந்து ஓய்வு பெற்ற பல்நோக்கு ஒருங்கிணைப்பளர்கள், மற்றும் உதவியாளர்களில், முதல்கட்டமாக 582 பேருக்கு, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மொத்தம் 10 கோடியே 72 லட்சம் ரூபாய் பணிக் கொடை வழங்கினார். சட்டப் பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.

செல்வம், சமூக நலத் துறை அமைச்சர் திரு. ஜெயகுமார், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இயக்குநர் செல்வி. முத்து மீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------

*வானிலை (13)*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்று தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், மற்றும், நீலகிரி, சேலம், ஈரோடு, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழைக்கும்,கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 16ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தென்மேற்கு பருவமழை, வடதமிழகத்தில் தீவிரமாக இருந்தது. வடதமிழகத்தில் அதிகபட்சமாக, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு உள்ளிட்ட இடங்களில், தலா 12 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

*கிரிக்கெட் டெஸ்ட் (8)*

இந்திய-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே, புதுடெல்லியில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று, ஆட்ட நேர இறுதி வரை, இந்தியா தனது முதலாவது இன்னிங்சில், 2 விக்கெட் இழப்புக்கு, 318 ரன் எடுத்து இருந்தது. முன்னதாக இந்திய அணி டாஸ் ஜெயித்து, பேட்டிங்கை தெரிவு செய்தது. 2 போட்டிகளை கொண்ட இத்தொடரில், ஏற்கனவே அகமதாபாத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில், இந்தியா வெற்றி பெற்று, 1க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

--------------------------

*மகளிர் கிரிக்கெட் (5)*

உலக கோப்பைக்கான ஐசிசி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டித் தொடரில், பங்களாதேஷ்-நியூசிலாந்து அணிகளுக்கு இடையே, இன்று குவஹாத்தியில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் நியூசிலாந்து அணி, சற்று முன் வரை, -------- ஓவர்களில், ------------ விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்து இருந்தது.

--------------------------

*முர்மு (7)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று குஜராத் மாநிலம் சோமநாதர் ஆலயத்தில் தரிசனம் செய்தார். மாநில சுற்றலாத் துறை அமைச்சர் திரு. முளுபாய் பேரா உள்ளிட்டோர், கோவிலில் குடியரசுத் தலைவரை வரவேற்றனர். முன்னதாக கோவில் வளாகத்தில்

உள்ள சர்தார் பட்டேல் சிலைக்கு குடியரசுத் தலைவர் மலரஞ்சலி செலுத்தினார். அவர் இன்று சாசன் பகுதிக்கு பயணம் மேற்கொண்டு, அங்குள்ள பழங்குடி மக்களை சந்திக்கிறார்.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், பிரதமரின் தன - தான்ய யோஜனா திட்டத்தையும், பயறு வகைகளுக்கான சுயசார்பு இயக்கத்தையும் தொடக்கி வைக்கிறார்.

ஒவ்வொரு மனிதனின் நல வாழ்விலும், மனநலனுக்கு அடிப்படை பங்கு இருப்பதாக, உலக மனநல தினச் செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவில் டிஜிட்டல்மயப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுக் கழகத்தில் இருந்து ஓய்வு பெற்ற, பல்நோக்கு ஒருங்கிணைப்பளர்களுக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று பணிக் கொடை வழங்கினார்.